# பொல்கஹவெல பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆகஸ்ட் 13 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பொல்கஹவெல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------------

மீளாய்வாண்டின் போது ரூபா 5,000,000 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த 01 ஏக்கர் 06 பர்சஸ் அளவான வீரம்புகெதர ''ஸென்ட பிரஜட் தோட்டம்'' கணக்கு கூற்றுக்களில் ரூபா 500,000 தொகை என பதிவு செய்யப்பட்டிருந்தது.

1.3.2 நிகழத்தக்க பொறுப்புக்கள்

-----------------------------------------

சபையில் சேவையாற்றிய ஓய்வு பெற்றிருந்த உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்த வேண்டிய ஊழியர்கள் தொடர்பாக சபையினால் அந் நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை முறைப்படி செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதி வரை அந் நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய மீதி ரூபா 8,140,747 ஆக காணப்பட்டது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு தொடர்பாக இறுதி மீதிகளின் கீழ் கணக்கு விடயம் ஒன்றுடன் தொடர்புடைய கணக்குகளின் பிரகாரம் மற்றும் குறிப்பிட்ட பதிவேடு இடையே ரூபா 189,486 இற்கான இணக்கமின்மை காணப்பட்டது.

1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------------

2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 71,614,055 ஆக காணப்பட்டது. அவற்றில் ரூபா 12,064,235 தொகை 3 வருடத்தை மிகைத்த காலம் முதல் காணப்படும் மீதிகளாகும்.

02. நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் செயற்பாட்டு மிகை ரூபா 32,195,720 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செயற்பாட்டு மிகை ரூபா 48,748,055 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 16,552,335 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது. இந்த செயற்பாட்டு விளைவிற்கு ரூபா 58,738,092 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 102,534,627 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டு தொடர்பான நிதி விளைவு ரூபா 11,600,815 இற்கான பற்றாக்குறையாக மாறியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 116,866,479 தொகையில் மொத்தமாக 87% என ரூபா 101,558,090 தொகையும் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகளினை அடக்கியுள்ளது. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 58,738,092 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களினால் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு வழங்கியிருந்த பணம் ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவு ஆகிய ரூபா 84,670,758 தொகையில் மொத்தமாக 73% என ரூபா 61,417,807 தொகை தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவிடப்பட்டிருந்தததுடன் அவற்றில் மொத்தமாக 68% என ரூபா 41,730,489 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்ததுடன் அப் பெறுமதி அரச மீண்டுவரும் பங்களிப்புகளினால் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மூலதனச் செலவு ஆகிய ரூபா 102,534,627 தொகையில் மொத்தமாக 6% என ரூபா 5,847,426 தொகை மாத்திரம் சபை

நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தததுடன் மொத்தமாக மீதி 94% ஆகிய ரூபா 96,687,201 இற்கான தொகை கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களாகும்.

2.3 வருமான நிருவாகம்

----------------------------------

2.3.1 வீத வரி

------------------

(அ) மீளாய்வாண்டின் போது நிலுவை வீதவரி என கணக்குகளில் காட்டப்பட்டிருந்த ரூபா 6,198,153 தொகையில் ரூபா 1,776,106 தொகை என மொத்தமாக 29% உம் பொதுஹர உப அலுவலகம் தொடர்பாகவும், ரூபா 2,094,210 தொகை என மொத்தமாக 34% உம் ஹதலிஸ்பஹவே உப அலுவலகம் தொடர்பாகவும் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிருந்த திரண்ட வீத வரி நிலுவை ரூபா 6,198,153 தொகையில் முன்னைய ஆண்டுகளுடன் தொடர்புடைய ரூபா 4,442,481 தொகை என மொத்தமாக 72% உம் காணப்பட்டது.

2.3.2 கடை வாடகை

----------------------------

(அ) பொது சந்தையிலுள்ள கடைகள் தொடர்பாக நீண்ட காலமாகக் காணப்படும் ரூபா 45,712 இற்கான நிலுவை மீதி ஒன்று மீளாய்வாண்டு இறுதி வரையும் காணப்பட்டது.

(ஆ) 2011 ஆண்டின் போது உடைத்து அகற்றப்பட்டிருந்த பொதுச் சந்தையிலுள்ள 06 கடைகள் தொடர்பாக ரூபா 30,643 தொகையும், பொல்கஹவெல நகரத்தில் 03 சிறு கடைகளும் தொடர்பாக ரூபா 54,770 தொகையுமாக ரூபா 85,413 தொகை ஒன்று மீளாய்வாண்டு வரை நிலுவையாக காணப்பட்டது.

(இ) தற்போது பில் போடப்படல் மேற்கொள்ளப்படாத மூன்று இடங்கள் தொடர்பாக ரூபா 10,511 இற்கான நிலுவை வாடகை ஒன்று மீளாய்வாண்டு வரையும் காணப்பட்டது.

2.3.3 குத்தகை

--------------------

(அ) நிலுவை வருமானம் ரூபா 2,115,756 தொகையினை அறவீடு செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்டிருந்த 7 வழக்குகள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் முறைப்படி பேணப்படாமையால் வழக்கு தீர்ப்பு விபரங்கள் மற்றும் தற்போதைய நிலைமையை இனங்காண முடியாதிருந்தது.

(ஆ) பஸ் நிலைய சிற்றுண்டிச் சாலையை குத்தகைக்கு கொடுத்தல் தொடர்பாக குறிப்பிட்ட குத்தகையாளரிடம் மீளாய்வாண்டளவில் ரூபா 684,158 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டது.

03. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

3.1 முகாமைத்துத் திறமையின்மை

------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான வீரம்புகெதர உப அலுவலகம் அமைந்துள்ள 3 ஏக்கர் காணி காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் உரித்தாக்கப்படாமையால் ஆணைக்குழுவினால் அந்தக் காணி தனியார் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. சபை மீண்டும் அந்தக் காணியில் 01 ஏக்கர் 06 பர்சஸ் கொண்ட பகுதியொன்றினை பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது சபை நிதியத்தில் இருந்து ரூபா 5,000,000 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான ஒரலியத்த காணியில் அங்கீகாரமற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. அத்துடன் அந்த காணியின் பரப்பளவு மற்றும் பெறுமதியினை காணி பட்டோலையில் உட்படுத்தியிருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்

------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது மோட்டார் வாகனங்கள் மற்றும் மாட்டுவண்டி கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,255,000 தொகை பெறுமதியான 68-3676 இலக்க டிபர் வண்டி மற்றும் ரூபா 1,319,050 தொகை பெறுமதியான LF-4884 இலக்கம் கொண்ட பெஜரோ ஜீப் வண்டி முறையே 2013 மற்றும் 2014 ஆண்டுகள் முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) வாகன கட்டுப்பாடு